DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:**S.C.No.96/2025**

Prosecution Witness P.W.8

Name : **திரு.Dr.கோகுலபாண்டிய சங்கர்** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 20.01.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2019-ம் தேதியன்று தேனி அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது பிற்பகல் 3.10 மணி அளவில் போடி நகர காவல் நிலைய குற்ற எண் 959 / 2019 வழக்கில் தொடர்புடைய இறந்து போன அபிபுல்லா வயது 45 என்ற ஆண் நபரின் பிரேத பரிசோதனை செய்ய வேண்டி கொடுத்த வேண்டுகோள் விண்ணப்பத்தினை போடி நகர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டேன். பிரேதத்தை முதல் நிலை காவலர் எண் 2120 திரு.குமார் என்பவர் அடையாளம் காட்டினார்.

2. பிரேதத்தில் காணப்பட்ட அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்த பின்னர் பிற்பகல் 3.20 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினேன். பரிசோதனையின் போது மேற்குறிப்பிட்ட நபர் மிகவும் மெலிந்த உடல் அமைப்புடனும் வயிற்றுப் பகுதி பிறை நிலா வடிவில் உள்வாங்கிய நிலையில் காணப்பட்டது. அவரது கை,கால் விரல் நகங்கள் நீல நிறத்திலும் காணப்பட்டது.

மேலும் பரிசோதனை செய்தபோது வயிற்றுப் பகுதியில் 50 மில்லி அளவிற்கு அடர் நிறத்திலான திரவம் மருந்து வாடையுடனும் காணப்பட்டது. சிறு குடல் பகுதியில் 30 மில்லி அளவிற்கு அடர் நிறத்திலான திரவம் மருந்து வாடையுடன் காணப்பட்டது. நாவடி எலும்புகள் சீராக காணப்பட்டது. இதயம் சீராக காணப்பட்டது. இதயத்தின் ரத்த நாளங்கள் கொழுப்பு படிவங்கள் படிந்த நிலையில் காணப்பட்டது. ஈரல், சிறுநீரகம் மற்றும் மூளைப்பகுதி சீராகவும் நீர் கோர்த்த நிலையிலும் காணப்பட்டது. எனவே மேற்குறிப்பிட்ட நபரின் உடல் உள்ளுறுப்புக்களான இதயம், கல்லீரல், சிறுநீரகம் மற்றும் மூளை பகுதியை திசு பகுப்பாய்விற்கும், இதர உடல் உள்ளுறுப்புகளை ரசாயன பரிசோதனைக்கும் சேகரம் செய்து அனுப்பினேன். எனவே மேற்குறிபிட்ட நபரின் இறப்பிற்கான காரணம் நிலுவையில் இருப்பதாக கூறி முதல் நிலை பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கினேன்.

3. பின்னர் 21.03.2020 அன்று பெறப்பட்ட திசு பகுப்பாய்வு அறிக்கையில் இதயத்தின் தசைப்பகுதிகள் நாள்பட்ட நிலையில் சுருங்கிய நிலையில் இருந்ததாகவும், மூளைப்பகுதியில் அவர் இறப்பதற்கு முன்பே மூளையில் உள்ள செல்கள் இறந்த நிலையில் இருந்ததற்கான அறிகுறிகளும் மேலும் சிறுநீரக பகுதியில் உள் உறுப்புகள் சிதைந்த நிலையிலும் காணப்பட்டதாக அறிக்கை பெற்றேன். பின்பு 07.10.2020 அன்று பெறப்பட்ட ரசாயன பரிசோதனை அறிக்கையில் அவரது உடல் உள்ளுறுப்புகளில் ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற விஷப்பொருள் இருப்பதாக அறிக்கை பெறப்பட்டது. எனவே மேற்குறிப்பிட்ட நபர் ஆர்கனோ பாஸ்பரஸ் என்ற விஷப்பொருள் உள் சென்றதால் ஏற்பட்ட பின்விளைவுகளால் இறந்திருக்கலாம் என்று கருத்து கூறி இறுதி கருத்துரை வழங்கினேன்.

4. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 விஸ்ரா அறிக்கை அ.சா.ஆ. 8, இறுதி கருத்துறை அ.சா.ஆ. 9 பிஸ்தோ பேத்தாலஜி அறிக்கை அ.சா.ஆ.10, இறந்து போனவரது உடல் எந்த நிலையில் இருந்தது

என்பதை காட்டக் கூடிய புகைப்படம் என்னால் எடுக்கப்பட்டது. எல்லா வழக்குகளிலும் நான் புகைப்படம் எடுப்பது வழக்கம். அதேபோல் இறந்து போனவரின் புகைப்படம் நான் எடுத்துள்ளேன். அந்த புகைப்படம் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்கிறேன் அந்தப் புகைப்படம் அ.சா.ஆ.11. மேற்கண்ட இறந்து போனவரது நுரையீரல் சீராக உள்ளது எனவே அவர் TB நோயால் இறந்திருக்க வாய்ப்பில்லை. இந்த ஆர்கனோ பாஸ்பரஸ் என்பது பூச்சிக்கொல்லி மருந்து வகையைச் சார்ந்தது.மேற்கண்ட பூச்சிக்கொல்லி மருந்தை சிறுக சிறுக ஒரு நபரின் உணவில் கொடுக்கும்போது அவரது இறப்பு நிகழ்வதற்கான வாய்ப்புகள் உள்ளது. இந்த நிலையில் இருந்த இறந்து போன நபரால் எழுந்து நடமாடி அவரது வேலைகளை செய்வதற்கான வாய்ப்புகள் குறைவு. எனவே அவர் கடைக்கோ, வியாபாரத்திற்கோ சென்று வேலை செய்வதற்கு வாய்ப்புகள் கிடையாது. ஆய்வாளர் என்னை வழக்கு தொடர்பாக விசாரணை மேற்கொண்டார்.

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை, சாட்சி விசாரணை 04.11.2025–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் அவகாசம் வழங்கப்படும் இன்று எதிரிகள் தரப்பு வழக்கு ஆஜரில்லை என்பதால் என்பதால் இலவச சட்ட உதவி மையத்திலிருந்து இலவச சட்ட உதவி வழக்கறிஞரை (LADCS) எதிரிகளுக்கு நியமிக்கப்பட்டு <u>இலவச சட்ட உதவி வழக்கறிஞர் குறுக்கு விசாரணை)</u>**

1. இந்த வழக்கின் வரலாறு போலீசாரால் என்னிடம் கொடுக்கும்போது இறந்து போன நபர் வேறு ஏதேனும் நோய்வாய்ப்பட்டிருந்தாரா என்பது தொடர்பான ஆவணங்கள் எதையும் என்னிடம் கொடுத்தாரா என்றால் அது பற்றி கொடுக்கவில்லை. நான் கொடுத்த அறிக்கையில் நுரையீரல் பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான், நுரையீரல் நல்ல நிலையில் சீராக இருந்த காரணத்தினால் அதை நான் பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை. பொதுவாக TB நோயால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் ஆறு மாதங்கள்

அவர் மாத்திரை எடுத்து சரியாகாத பட்சத்தில் தொடர்ந்து இரண்டு வருடங்கள் அவர் மருந்து எடுத்து உட்கொள்ள வேண்டும் என்றால் மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரே மருந்து அவர் எடுத்துக் கொள்ளக் கூடாது அவ்வாறு TB நோயால் பாதிக்கப்பட்ட மருத்துவ பார்த்துக் கொண்டிருந்த ஒரு நபருக்கு நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய புகைப்படத்தில் காணப்பட்டிருப்பது போல் அந்த நபருக்கு உடல்வாகு ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் அவரது உடல் பருமன் எவ்வாறு இருந்தது, ஆகாரம் என்ன எடுத்துக் கொண்டார் என்பதை பொறுத்து மட்டுமே கருத்து சொல்ல முடியும்.

2. இதய தசை பகுதி நாள்பட்ட நிலையில் சுருங்கி இருந்ததாக நான் கருத்துரை வழங்கியிருந்தேன், இறப்பதற்கு முன்பாகவே அவரது மூளை செல்கள் இறந்த நிலையில் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன், சிதைந்த நிலையில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். இதே போல் சிறுநீரகப் பகுதியில் சிதைந்து இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன். இவை அனைத்தும் TB நோயால் பாதிக்கப்பட்ட நபருக்கு ஏற்பட கூடும் என்றால் சரியல்ல அவ்வாறு ஏற்படாது. TB இருந்தால் மூளை பகுதியில் லிக்யூ ஃபேக்ஷன் என்ற நிலை TB நோயாளிகளுக்கு ஏற்படும் அவ்வாறு மூளைப்பகுதியில் இந்த வழக்கை பொறுத்தவரை லிக்யூ ஃபேக்ஷன் ஏற்படவில்லை. TB–யில் இறந்தால் மூளை பகுதி இறந்த நிலையில் இருக்கும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.20 15:55:31 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.